சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:02.03.2023

வா.சா.1 – சக்திவேல் ராஜா, த/பெ.ராமசாமி ராஜா

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

தாவா சொத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனம் வாடகைதாரராக உள்ளனர் என்றால் சரிதான். 18.06.2001ல் நிர்மலா, ராஜு, திருமகள் ஆகியோர் தாவா சொத்திற்கு எனக்கு முன்பு சுவான்தாரர்களாக இருந்தார்கள் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. 18.06.2001ல் மேற்படி மூன்று நபர்களும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்துடன் வாடகைதாரராக 30 ஆண்டுகளுக்கு வாடகை ஒப்பந்தம் செய்தனர் என்றால் எனக்கு தெரியாது. அந்த வாடகை ஒப்பந்தத்தை வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாவா சொத்தை ஏலத்தில் எடுத்தபின்பு தான் அதுப்பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்தை ஸ்டேட் பேங்க் ஏலம் விட்டதில் நான் ஏலதாரராக அச்சொத்தை கிரையம் பெற்றேன். தாவா சொத்தை ஏலம் விடும்போதே இந்தியன் ஆயில் நிறுவனம் வாடகைதாரராக அந்த வாடகைக்கு உட்பட்டு ஏலம்விடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் தான் நேரடியாக ஏலம் எடுத்தேன். அதற்கான வங்கி உடனான பரிவர்த்தனைகளை நான் தான் செய்தேன். தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு 10 நாட்களில் இந்தியன் ஆயில் நிறுவனத்தை அணுகினேன். அப்போது அவர்கள் ஒரு படிவத்தை நிரப்பி கொடுக்க வேண்டும் என்றும் அப்போதுதான் நான் ஏலம் எடுத்த விவரம் அவர்களுக்கு தெரிய வரும் என்றும் அவர்கள்

வாடகைதாரர்களாக என்னிடம் இருப்பதகாவும் சொன்னார்கள். இந்தியன் ஆயில் நிறுவனம் என்னை ஒரு அவிடவிட் தாக்கல் செய்ய சொன்னார்கள். அதைத்தான் நான் ஏற்கனவே படிவம் என்று குறிப்பிட்டேன். வா.சா.ஆ.12 தான் அந்த அவிடவிட் என்றால் அது எனக்கு தெரியவில்லை. அந்த அவிடவிட்டில் திரு.P.பாண்டியராஜ் என்ற வழக்கறிஞர் / நோட்டரி முன்பு விருதுநகரில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. எந்த வங்கியில் வாடகையை செலுத்தவேண்டும் என்பதற்காக என்னுடைய சேமிப்பு கணக்கையும் வங்கியின் பெயரையும் கேட்டார்கள் அதை நான் கொடுத்தேன். அதன்படி விருதுநகர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள எனது வங்கி கணக்கு எண்ணை கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்படி பிரதிவாதிகள் எனது வங்கி கணக்கில் மாதந்திர வாடகையை செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல, ஒருமாதம் கூட சரியாக கொடுக்கவில்லை. நான் வங்கி கணக்கை முடிக்கும்வரை பிரதிவாதிகள் எனது வங்கி கணக்கில் சரியாக வாடகை செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வங்கி கணக்கை Close செய்ததை இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரிதான். எனது வங்கி கணக்கை எப்பொழுது Close செய்தேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் வங்கி கணக்கை Close செய்யும்வரை ஒவ்வொரு மாதமும் பிரதிவாதிகள் சரியாக வாடகை செலுத்திவந்தார்கள் என்றால் சரியல்ல எனக்கு சரியாக வாடகை கொடுக்கவில்லை என்றும் எனக்கு வேறு சில வங்கி கணக்குகள் இருந்ததால் அந்த வங்கி கணக்கை முடித்தேன் என்று சாட்சி சொல்கிறார். நான் Close செய்த அடுத்த மாதமும் பிரதிவாதிகள் NEFT மூலமாக மாத வாடகை செலுத்தியும் அது திரும்ப வந்துவிட்டது

என்றால் இல்லை. அதனால் தான் பிரதிவாதிகள் காசோலை மூலமாக ஒவ்வொரு மாதமும் வாடகையை செலுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு காசோலை வந்ததில்லை. அதற்கு பின்பும் காசோலையை நான் பெற்றுள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஒரு தொகையை டெபாசிட் செய்து அதை நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். எனக்கும் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கும் தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லை. 10.12.2018 ல் வா.சா.ஆ.13 நோட்டிஸ் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்பில் நான் வாடகை பாக்கி நிலுவை இருப்பதாக சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிப்ரவரி 2019 வரை பிரதிவாதி சரியாக வாடகை செலுத்தி வந்தனர் என்றும் நான் வங்கி கணக்கை Close செய்ததால் காசோலை மூலமாக வாடகை செலுத்தி வந்தனர் என்றும் அந்த வாடகையை நான் நிராகரித்ததால் திரும்ப வந்துவிட்டது என்றால் சரியல்ல.